## களம் தேர்வு – 06

1. ‘ஏதிலி’ – என்பதன் சரியான பொருளறிக.

(A) ஏழை (B) அந்நியர் (C) பகைவர் (D) அகதி

2. முறையான அமைப்பைக் கொண்ட சொற்றொடரைத் தேர்க.

(A) தொகுதியைச் சிறகுகளின் இறகு என்பர்.

(B) இறகுகளின் தொகுதியைச் சிறகு என்பர்.

(C) சிறகுகளின் தொகுதியைச் இறகு என்பர்.

(D) இறகுகளின் சிறகை தொகுதி என்பர்.

3. கூற்று 1 : கண்காணி என்ற பேச்சுவழக்கு சொல்லின் பொருள் – நெல் அளவை மேற்பார்வை செய்பவர்.

கூற்று 2 : கண்காணம் என்ற பேச்சுவழக்கு சொல்லின் பொருள் – களத்தில் சேர்க்கப்பட்ட நெல் அளவு.

(A) கூற்று 1, 2 சரி (B) கூற்று 1 சரி , 2 தவறு

(C) கூற்று 1, 2 தவறு (D) கூற்று 1 தவறு , 2 சரி

4. யானையைக் குறிக்கும் சொற்களுள் தவறான சொல் அமைந்துள்ள தொடர் எது.

(A) அஞ்சனம் , கரி , வல்விலங்கு , குஞ்சரம் , இரதி.

(B) கயம் , வேழம் , களிறு , பிளிறு , களபம்.

(C) மாதங்கம் , கைம்மா , அஞ்சனாவதி , அள்ளியன் , அத்தி.

(D) அரசுவா , அனுபமை , இபம் , வாரணம் , ஆனை.

5. பொருளோடு பொருந்தாத இணைகள் எத்தனை?

1. கலை – ஆண் குரங்கு 2. களை – குற்றம்

3. உலை – மனநடுக்கம் 4. உளை – சிங்கத்தின் பிடரிமயிர் 5.கனை – மூங்கில்

(A) 1 இணை (B) 2 இணை (C) 3 இணை (D) 4 இணை

6. “செந்தமிழ்ச் செம்மல்” என்று அழைக்கப்படுபவர் யார்?

(A) ஜி.யு.போப் (B) வீரமாமுனிவர் (C) கால்டுவெல் (D) எல்லிஸ்

7. பொருத்துக.

a) குரை -1) குற்றம்
b) பொறி -2) எருமைக்கன்று
c) குறை -3) வண்டு
d) பொரி -4) குதிரை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

8. பிரித்தெழுதுக. ‘ வெண்டலை’

(A) வெண்டு + அலை (B) வெண் + அலை

(C) வெண்மை + அலை (D) வெண்மை +தலை

9. எதிர்ச்சொல் காண்க. ‘ கொள்ளலர்’

(A) பெற்றவர் (B) பெறாதவர் (C) கொடுப்பவர் (D) கொடுக்காதவர்

10. சந்திப்பிழையற்றத் தொடரைத் தேர்க.

(A) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளைப் புரிந்து பேசுவர்.

(B) தமிழர் ஆற்றுத் தண்ணீரைத் தேக்கிச் சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

(C) அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப்பணி பெற வேண்டும்.

(D) சான்றோர் மிகுந்த பொறுப்புடன் சிறப்பான சேவை புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தான்.

11. ‘கோட்டை’ என்ற தமிழ்ச்சொல்லானது எந்த திராவிட மொழியில் ‘கோண்டே’ என பயன்படுத்தப்பட்டுள்ளது.

(A) மலையாளம் (B) கன்னடம் (C) தெலுங்கு (D) துளு

12. தக்கார் – என்பதன் வேர்ச்சொல் காண்க.

(A) தக் (B) தக்க (C) தகு (D) தக்கு

13. பொருத்துக.

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) அமைச்சியல் | - 1) 13 | | (A) | 4 | 5 | 1 | 3 | 2 |
| b) பாயிரவியல் | - 2) 01 | | (B) | 3 | 5 | 1 | 2 | 4 |
| c) ஒழிபியல் | - 3) 32 | | (C) | 4 | 2 | 5 | 1 | 3 |
| d) ஊழியல் | - 4) 25 | | (D) | 1 | 2 | 3 | 4 | 5 |
| e) அரசியல் | - 5) 04 | | | | | | | |

14. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.
கோடிட்ட சொல்லின் பிரித்தறிதலைக் காண்க.

(A) அ + சிறும் (B) அச் + சிறும் (C) அச்சு + சிறும் (D) அச்சு + இறும்

15. Idols - என்பதன் கலைச்சொல் காண்க

(A) முன்னோடி (B) கலை (C) குறியீடு (D) சிலைகள்

16. பிள்நாக்கு – என்பதன் சரியான சொற்பொருள்

(A) பின்பகுதி நாக்கு (B) பிளந்த நாக்கு (C) தடித்த நாக்கு (D) வளைந்த நாக்கு

17. பொருந்தா இணையைக் காண்க

(A) வணம் – ஒலி (B) புடவி – உலகம்

(C) விண்டு – தாமரை (D) ஒண்ணகர் – பெரிய நகர்

18. 'விண்டு' என்னும் பொருளில் பொருந்தாதது எது?

(A) மேகம் (B) மலை (C) மூங்கில் (D) நிலம்

19. பொருத்துக

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) அமை - 1) வெறுத்தல் | | | (A) | 5 | 4 | 1 | 2 | 3 |
| b) மாசுணம் - 2) தேன் | | | (B) | 1 | 2 | 3 | 4 | 5 |
| c) முனிதல் - 3) பாம்பு | | | (C) | 2 | 5 | 3 | 1 | 4 |
| d) தாள் - 4) மூங்கில் | | | (D) | 4 | 3 | 1 | 5 | 2 |
| e) பிரசவம் - 5) முயற்சி | | | | | | | | |

20. 'நவை' என்பதன் சரியான பொருளறிக

(A) உலகம் (B) குற்றம் (C) நாடு (D) முடிவு

21. தவறான பொருள் தரும் தொடரெது?

(A) இனிமேல் இப்படி ஒரு கனம் உன் வாழ்க்கையில் வராமல் பார்த்துக் கொள்

(B) திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யு.போப் கனடாவில் பிறந்தவர்

(C) ஓர் இனத்தை அழிப்பதற்கு அவர்கள் நூல்களை எரித்தால் போதும்

(D) அறிவைச் சாகடித்து விட்டால் மனிதன் செத்துவிடுவான்

22. மொழி முதல் மற்றும் இறுதியெழுத்தின் அடிப்படையில் தவறானதைத் தேர்ந்தெடு

(A) ஞ், ந், வ் என்ற மூன்று மெய்யும் தற்காலத்தில் மொழிக்கு இறுதியில் வருவதில்லை

(B) க், ச், ட், த், ப், ற் , ங் என்ற ஏழு மெய்யும் மொழிக்கு இறுதியில் வருவதில்லை

(C) க, ங, ச , ஞ, த, ந, ப, ம, ய, வ என்ற பத்து உயிர்மெய் எழுத்துகளின் வரிசையில் சில எழுத்துகள் மொழிக்கு முதலில் வரும்

(D) ட, ண, ர , ல, ழ, ள, ற, ன என்ற எட்டு உயிர்மெய் எழுத்துகளின் வரிசையில் ஒரு எழுத்துக்கூட மொழிக்கு முதலில் வராது

23. பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a) உயிரீறு - 1) மா+மரம் | | (A) | 2 | 3 | 4 | 1 |
| b) மெய்முதல் - 2) சுவை + இனிப்பு | | (B) | 1 | 3 | 4 | 2 |
| c) உயிர்முதல் - 3) அருள் + கொடை | | (C) | 2 | 1 | 4 | 3 |
| d) மெய்யீறு - 4) தமிழ் + அமுது | | (D) | 1 | 4 | 2 | 3 |

24. பேச்சுவழக்கு சொற்களுக்கு இணையான எழுத்து வழக்கு சொற்களுள் தவறானதைத் தேர்ந்தெடு

(A) அதிகாலையில் எழுந்திருந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்

(B) முயற்சி செய்தால் அதற்கேற்ற பயன் வராமல் போவாது

(C) காலத்திற்கேற்ற மாதிரி புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்

(D) ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது, எல்லாவற்றையும் கவனமாகப் பதியவைக்க வேண்டும்

25. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களுள் தவறான இணைகள் எத்தனை?

1. வாடகை – குடிக்கூலி
2. உறுதி – நிச்சயம்
3. ஞாபகம் – நினைவு
4. வேறுபாடு – வித்தியாசம்
5. சரித்திரம் – வரலாறு
6. நாடு – தேசம்

(A) 2 இணை (B) 3 இணை (C) 4 இணை (D) 1 இணை

26. வேறுபட்டதைத் தேர்க

(A) காட்சியழகு (B) கலையறிவு (C) பூவழகு (D) தீயணைப்பான்

27. கீழ்க்கண்ட வரிசையில் புணரும் சொல் எது?

1. ஈறுபோதல்
2. அடி அகரம் 'ஐ' ஆதல்
3. இனையவும்
4. இனமிகல்

(A) மூதூர் (B) பெரியன் (C) செந்தமிழ் (D) பைந்தளிர்

28. பொருந்தாத சொல் எது?

(A) விஞ்ஞானம் (B) இவ்விதம் (C) அம்மா (D) நண்பகல்

29. 'பேசான்' என்ற சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கணம் காண்க

(A) பேசு+ஆன் (B) பேசு+ஆ+ஆன் (C) பே+ஆன் (D) பேச்சு+ஆன்

30. பகுதி தொடர்பான கூற்றுகளை ஆராய்ந்து மாறுபட்டதைத் தேர்க.

(A) பகுதியை பகுதி விகுதி எனப் பிரிக்கமுடியாது.

(B) விகுதி பெற்ற ஏவல் வினையாக இருக்கும்

(C) சில சொற்களில் ஒற்று இரட்டித்துக் காலம் காட்டும்.

(D) ஒரு சொல்லின் முதனிலையே பகுதியாக அமையும்.

31. பொருந்தாதது எது?

(A) தமிழச்சி – ச் (B) ஓட்டுநர் – ட் (C) ஒருத்தி – த் (D) மூவர் – வ்

32. எழுத்துப்பேறு தொடர்பான கூற்றுகளை ஆராய்ந்து மாறுபட்டதைத் தேர்க.

(A) விகுதிக்கு துணையாக வரும் (B) சாரியை வர வேண்டிய இடத்தில் வரும்

(C) காலம் காட்டாது (D) பகுபத உறுப்புகளில் இறுதி உறுப்பு

33. கலைச்சொல் காண்க – Back Water

(A) உப்பங்கழி (B) மறைநீர் (C) மழைநீர் (D) கடல்நீர்

34. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | - 1) இ | | (A) | 3 | 2 | 1 | 4 |
| b) தன்மை பன்மை வினைமுற்று விகுதி | - 2) என் | | (B) | 1 | 4 | 3 | 2 |
| c) படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதி | - 3) எம் | | (C) | 3 | 1 | 4 | 2 |
| d) முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | - 4) மார் | | (D) | 2 | 3 | 4 | 1 |

35. கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும் மூத்தோரை இல்லாத அவைக்களனும் - இப்பாடலடி இடம் பெற்ற நூல் எது?

(A) மூதுரை (B) திரிகடுகம் (C) ஆசாரக்கோவை (D) முதுமொழிக்காஞ்சி

36. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) Invasion | - 1) தொன்மம் | | (A) | 5 | 1 | 3 | 4 |
| b) Myth | - 2) பின்னொட்டு | | (B) | 4 | 5 | 1 | 2 |
| c) Pseudonym | - 3) முன்னொட்டு | | (C) | 5 | 1 | 4 | 3 |
| d) Suffix | - 4) புனைபெயர் | | (D) | 2 | 4 | 1 | 5 |
| | - 5) படையெடுப்பு | | | | | | |

37. ஒருமை - பன்மை அடிப்படையில் விடைக் காண்க

கூற்று 1: எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கின்றன

கூற்று 2: உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன

(A) கூற்று 1, 2 சரி (B) கூற்று 1 சரி / 2 தவறு (C) கூற்று 1, 2 தவறு (D) கூற்று 1 தவறு / 2 சரி

38. வேர்ச்சொல் காண்க - ஈன்ற

(A) ஈ (B) ஈன் (C) ஈதல் (D) ஈன்று

39. ‘ஆடுகம்’ என்பதன் வினைமுற்று வகை

(A) தன்மை ஒருமை (B) முன்னிலை பன்மை

(C) தன்மை பன்மை (D) முன்னிலை ஒருமை

40. யுகம் - என்பதன் சரியான தமிழாக்கம்

(A) காலம் (B) ஊழி (C) ஆண்டு (D) ஊழ்

41. கல்+அதர் - இது எவ்விதியின் படி புணர்ந்தது

(A) டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே (B) முற்றும் அற்றும் ஒரோ வழி

(C) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் (D) தனிக்குறில்முன் உயிர்வரின் இரட்டும்

42. ‘அயர்விலர்’ என்பதன் எதிர்ச்சொல் காண்க

(A) உயர்ந்தவர் (B) உயர்விலாதவர் (C) சோர்ந்தவர் (D) சோர்விலாதவர்

43. தவறாகப் பொருத்தப்பட்டுள்ள கலைச்சொல்லைத் தேர்க.

(A) Earthworm - நாங்கூழ்ப்புழு (B) Awareness - விழிப்புணர்வு

(C) Passport - கடவுச்சீட்டு (D) Materialism -உலகமயமாக்கல்

44. பிரித்து எழுதுக “ஞாயிற்றொளி”

(A) ஞா+இற்று+ஒளி (B) ஞாயிறு + ஒளி

(C) ஞாயிற் + றொளி (D) ஞாயிற்று+ஒளி

45. கூவும் குயிலும், கரையும் காகமும் - இத்தொடரில் இடம் பெற்ற மரபு -------

(A) பெயர் மரபு (B) வினைமரபு (C) ஒலிமரபு (D) இவை மூன்றும்

46. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.

(A) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்

(B) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்

(C) இலக்கிய மேடைகளில் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்

(D) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு

47. பூஜை, விஷயம், உபயோகம் - என்பவை முறையே எவ்வாறு தமிழில் வழங்கப்படும்.

(A) வழிபாடு, செய்தி, பயன்பாடு
(B) பயன்பாடு, வழிபாடு, செய்தி
(C) வழிபாடு, பயன்பாடு, செய்தி
(D) செய்தி, பயன்பாடு, வழிபாடு,

48. தவறான ஒன்றைத் தேர்க.

(A) காலத்தச்சன் - காலம் + தச்சன்
(B) உழுதுழுது - உழுது+உழுது
(C) பேரழகு - பேர்+அழகு
(D) புறந்தருதல் - புறம்+தருதல்

49. பொருள் அறிக 'வேதித்து'

(A) ஓயாத
(B) உழைப்பு
(C) மாற்றி
(D) துறட்டி

50. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் - இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்.

(A) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள்.

(B) அடையாறுப் பாலத்தின் சுவரில்  எழுதாதீர்கள்.

(C) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள்.

(D) அடையாற்றுப் பாலத்தின் சுவரில் எழுதாதீர்கள்.

51. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

(A) மக்கள் அலை
(B) உயிர் அலை
(C) மக்கள் அவை
(D) மக்கள் வெள்ளம்

52. "மானுட சமுத்திரம் நானென்று கூவு
புவியை நடத்து ; பொதுவில் நடத்து" .... என்ற கவிதைக்குரியவர் யார்?

(A) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
(B) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
(C) முடியரசன்
(D) பாவேந்தர் பாரதிதாசன்

53. பின்வருவனவற்றுள் பாரதிதாசனாரின் கவிதை அடியைத் தேர்க.

(A) கத்தியை தீட்டாதே! புத்தியை தீட்டு!
(B) செந்தமிழ் நாடெனும் போதினிலே
(C) வீட்டிற்கோர் புத்தகசாலை வேண்டும்
(D) நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்

54. "கவிஞாயிறு" என்ற அடைமொழியிட்டு அழைக்கப்படும் கவிஞர்.

(A) முடியரசன்
(B) தாராபாரதி
(C) தமிழ்ஒளி
(D) கண்ணதாசன்

55. "எத்தனை உயரம் இமயமலை - அதில்
இன்னொரு சிகரம் உனது தலை!" என்று முழங்கியவர்?

(A) தாராபாரதி
(B) பாரதிதாசன்
(C) பெருஞ்சித்திரனார்
(D) முடியரசன்

56. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) நிரையகம் | - | 1) பாதுகாப்பு | (A) | 2 | 4 | 3 | 1 |
| b) புரையோர் | - | 2) விரும்பி | (B) | 3 | 4 | 1 | 2 |
| c) ஏமம் | - | 3) நரகம் | (C) | 4 | 3 | 1 | 2 |
| d) நயந்து | - | 4) சான்றோர் | (D) | 3 | 1 | 4 | 2 |

57. "கடுந்துப்பு" என்ற சொல்லின் எதிர்பொருள் அறிக.

(A) மிகுவலிமை (B) குறை வலிமை (C) வாழ்தல் (D) சாதல்

58. வடமொழியில் எழுதப்பட்ட பில்கணீயம் என்னும் காவியத்தைத் தழுவி தமிழில் பாரதிதாசனால் எழுதப்பட்ட நூல் எது?

(A) இருண்ட வீடு (B) குடும்ப விளக்கு (C) புரட்சிக் கவி (D) சேரதாண்டவம்

59. தமிழக அரசு பாரதிதாசனார் பெயரில் எங்கு பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது?

(A) கோவை (B) மதுரை (C) திருச்சி (D) சென்னை

60. பாரதிதாசனாரின் 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்ற தமிழ் வாழ்த்துப் பாடலை -------- அரசு தனது தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ளது.

(A) தமிழக (B) புதுவை (C) இந்திய (D) புதுகை

61. பின்வருவனவற்றுள் பெயரெச்சத் தொடரைத் தேர்க.

(A) காவிரி பாய்ந்தது (B) நண்பா எழுது! (C) பாடினாள் கண்ணகி (D) கேட்ட பாடல்

62. பின்வருவனவற்றுள் வினையெச்சத் தொடரைத் தேர்க.

(A) பாடி மகிழ்ந்தனர் (B) கட்டுரையைப் படித்தாள்

(C) சாலச் சிறந்தது (D) மற்றொன்று

63. பின்வருவனவற்றுள் செய்தித் தொடரைத் தேர்க.

(A) நேற்று நம் ஊரில் மழை பெய்ததா? (B) என்னே! காட்டின் அழகு!

(C) பூனை காலில் அடிபட்டுவிட்டது (D) அதிகாலையில் துயில் எழு

64. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) Despatch | - | 1) பிழை | (A) | 2 | 4 | 3 | 1 |
| b) Subsidy | - | 2) அனுப்புகை | (B) | 3 | 4 | 2 | 1 |
| c) Ceiling | - | 3) உச்சவரம்பு | (C) | 4 | 1 | 2 | 3 |
| d) Bug | - | 4) நல்கை | (D) | 4 | 3 | 2 | 1 |

65. கலைச்சொல் அறிக "PROSPECTUS"

(A) எழுது சுவடி (B) விடைச் சுவடி

(C) பொதுக் குறிப்புச் சுவடி (D) விளக்கச் சுவடி

66. ஈற்றுப் போலிக்கான உதாரணத்தைத் தேர்க.

(A) வளைஇ (B) பிழையா (C) எறிவாள் (D) திறன்

67. ‘தமிழில் எல்லாம் உண்டு ; தமிழின் கவிச்
சுவைக்கு ஈடுமில்லை இணையுமில்லை ;
தமிழால் அறிவியல் மட்டுமன்று ; அனைத்து
இயல்களையும் கற்க முடியும்” என்று சான்றுகளுடன் எடுத்துச் சொன்ன பெருந்தகை யார்?

(A) குன்றக்குடி அடிகளார் (B) டி.கே.சிதம்பரனார்
(C) கி.வா.ஜகந்நாதர் (D) காயிதேமில்லத்

68. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) கொண்மூ | - 1) போர் | | (A) | 4 | 1 | 3 | 2 |
| b) சமர் | - 2) வானம் | | (B) | 2 | 1 | 3 | 4 |
| c) ஆயம் | - 3) சுற்றம் | | (C) | 3 | 1 | 4 | 2 |
| d) விசும்பு | - 4) மேகம் | | (D) | 2 | 4 | 3 | 1 |

69. அயன் - என்னும் சொல்லின் பொருள் யாது?

(A) பிரம்மன் (B) விஷ்ணு (C) முருகன் (D) சிவன்

70. ஃப்ரெஸ்கோ - என்ற இத்தாலியச் சொல்லின் பொருள் யாது?

(A) ஓவியம் (B) கலைஞன் (C) புதுமை (D) சிகரம்

71. பொருத்தமான விடையைத் தேர்க.

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்

-------- ------- --------

(A) அப்பால்நாற் கூற்றே மருந்து (B) கற்றான் கருதிச் செயல்
(C) பார்தாக்கப் பக்கு விடும் (D) அற்றது போற்றின் உணின்

72. பொருள் அறிக ‘வதுவை’

(A) நெருங்குதல் (B) தெள்ளிய நீரலை (C) மார்க்கம் (D) திருமணம்

73. ஹிஜிரத் என்ற ------ சொல்லுக்கு இடம் பெயர்தல் என்பது பொருள்

(A) அரபு (B) போர்ச்சுகீசிய (C) பாரசீக (D) உருது

74. ‘டைரியம்’ என்பது எம்மொழிச் சொல்.

(A) சமஸ்கிருதம் (B) ஆங்கிலம் (C) இத்தாலி (D) இலத்தீன்

75. தவறான ஒன்றைத் தேர்க.

(A) அரும்பொருள் - அரும்+பொருள் (B) மனையென - மனை+என
(C) பயமில்லை - பயம்+இல்லை (D) கற்பொடி- கல்+பொடி

76. பொருள் அறிக ‘ஏமம்’

(A) மருந்து (B) பாதுகாப்பு (C) படகு (D) பகை

77. கலைச்சொல் அறிக “X-RAY”

(A) எதிரொளிப்பு கதிர் (B) ஊடுகதிர் (C) விளிம்புக்கதிர் (D) அலைக்கதிர்

78. சிறுதலைப்பு, நூற்பகுதி, எண், பெருங்கூட்டுத் தொடர் முதலிய இடங்களில் ------ வருதல் வேண்டும்

(A) காற்புள்ளி (B) அரைப்புள்ளி (C) முக்காற்புள்ளி (D) முற்றுப்புள்ளி

79. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) விரியன் | - 1) தண்டை | | (A) | 3 | 4 | 2 | 1 |
| b) திருமுருகு | - 2) காலாழி | | (B) | 3 | 1 | 4 | 2 |
| c) நாங்கூழ்ப் புழு | - 3) சிலம்பு | | (C) | 4 | 3 | 2 | 1 |
| d) குண்டலப்பூச்சி | - 4) பாடகம் | | (D) | 4 | 1 | 3 | 2 |

80. பாரதிதாசனாரின் இலக்கிய இதழ் ------

(A) தென்றல் (B) குயில் (C) விண்மீன் (D) காவியம்

81. "ஒரால்" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) ஓசை (B) நீக்குதல் (C) வருதல் (D) இணைதல்

82. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) கமலம் | - 1) மீன் | | (A) | 3 | 4 | 1 | 2 |
| b) கயல் | - 2) சந்தனம் | | (B) | 3 | 1 | 4 | 2 |
| c) கலாபம் | - 3) தாமரை | | (C) | 2 | 4 | 1 | 3 |
| d) களபம் | - 4) தோகை | | (D) | 2 | 1 | 4 | 3 |

83. சரியான இணையைத் தேர்ந்தேடு?

(A) கடும்பு - பகைவர் (B) கறுத்து - சினந்து

(C) கந்தம் - மனம் (D) கடிந்து - விளக்கு

84. " ஒற்கம்" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) ஒட்டுதல் (B) முடியா (C) தளர்ச்சி (D) விரைவு

85. " கிளை" என்ற சொல்லின் எதிர்ச்சொல் யாது?

(A) உறவினர் (B) பகைவர் (C) மரக்கிளை (D) நண்பர்

86. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) கிழமை | - 1) சோலை | | (A) | 2 | 4 | 1 | 3 |
| b) குலவு | - 2) கப்பல் | | (B) | 2 | 1 | 4 | 3 |
| c) கா | - 3)உரிமை | | (C) | 3 | 1 | 4 | 2 |
| d) கலம் | - 4) விளங்கும் | | (D) | 3 | 4 | 1 | 2 |

87. "சாலம்" என்ற சொல்லின் பொருள் யாது?

(A) ஆச்சாமரம் (B) ஆற்றுப்பூவரசு (C) அரசமரம் (D) ஆலமரம்

88. தவறான இணையைக் கண்டறிக.

(A) கிடுகு - முடைந்த (B) கிரணம் - ஒளிக்கதிர்

(C) கரந்த - மறைந்த (D) கலாம் - கப்பல்

89. வாக்கியம் ஒன்று : " களி" என்பது தேனைக் குறிக்கும்.

வாக்கியம் இரண்டு: " கிழி" என்பது துணியைக் குறிக்கும்.

(A) வாக்கியம் ஒன்று மட்டும் சரி (B) வாக்கியம் இரண்டு மட்டும் சரி

(C) வாக்கியம் இரண்டும் சரி (D) வாக்கியம் இரண்டும் தவறு

90. தவறான இணையைக் காண்க.

(A) களை - அழகு (B) கழை - கரும்பு (C) கலை - ஆண்மான் (D)கல் - கடல்

91. '' Lagoon'' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க.

(A) டெல்டா (B) காயல் (C) செம்மண் (D) உப்பங்கழி

92. பொருத்துக.

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a) Firm | -1) வளங்கள் | (A) | 2 | 3 | 1 | 4 |
| b) Dividing | -2) நிறுவனம் | (B) | 2 | 1 | 3 | 4 |
| c) Assets | -3) பகுப்பு | (C) | 3 | 1 | 4 | 2 |
| d) Conflict | -4) மோதல் | (D) | 3 | 4 | 1 | 2 |

93. "Recreation" என்ற புவியியல் தொடர்பான தமிழ்ச் சொல் காண்க.

(A) மீட்டுருவாக்கம் (B) புதுபித்தல் (C) பொழுதுபோக்கு (D) அணுகுமுறை

94. பொருத்துக.

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a) Intrigue | -1) உத்திரவாதம் | (A) | 3 | 2 | 4 | 1 |
| b) Indemnity | -2) பாசுரங்கள் | (B) | 3 | 4 | 2 | 1 |
| c) Subdued | -3) சூழ்ச்சி | (C) | 3 | 1 | 4 | 2 |
| d) Hymns | -4) அடக்குதல் | (D) | 2 | 1 | 4 | 3 |

95. "Animosity" என்ற ஆங்கில சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல்.

(A) விரோதம் (B) அன்பான (C) பகைமை (D) (A, C ) சரி

96. தவறான இணையைக் காண்க.

(A) Shattered - மனமுடைந்த (B) Geyser - வெந்நீர் ஊற்று

(C) Amenities - வசதிகள் (D) Thermal power- அனுமின்சக்தி

97. பொருத்துக.

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a) Expedition | -1) மேலாதிக்கம் | (A) | 4 | 3 | 2 | 1 |
| b) Bestowed | - 2) சிறப்பு வாய்ந்த | (B) | 4 | 2 | 3 | 1 |
| c) Splendour | -3) மதிப்பளித்தல் | (C) | 2 | 4 | 1 | 3 |
| d) Suzerainty | -4) போர்ப்பயணம் | (D) | 2 | 1 | 4 | 3 |

98. தவறான இணையைக் காண்க.

(A) Plunder - கொள்ளையடி

(B) Conferment - வழங்கப்பட்ட

(C) Unbiased - நிறையற்ற

(D) Amusement park - பொழுதுபோக்கு பூங்கா

99. சரியான இணையைக் காண்க.

(A) Fossil Fuel - படிம எரிபொருள் (B) Component - மூலப்பொருட்கள்

(C) Core - கவசம் (D) Mantle - கருவம்

100. பொருத்துக.

| | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|
| a) Minarets | -1) வாரிசு | (A) | 5 | 1 | 4 | 3 | 2 |
| b) Scion | -2) மூர்க்கமான | (B) | 5 | 4 | 1 | 2 | 3 |
| c) Refuge | -3) புரவலர் | (C) | 5 | 1 | 4 | 2 | 3 |
| d) Patron | -4) புகலிடம் | (D) | 5 | 4 | 3 | 2 | 1 |
| e) Ferocious | -5) தூபிகள் | | | | | | |